ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2157/29 - 2020 ජනවාරි මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.01.09

*2157/29 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 44(5) ஆம் பிரிவிற்கு இணங்க, பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்குரிய இராஜாங்க அமைச்சர்களுக்கு ஒதுக்கப்படும் விடயங்கள், பணிகள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் இவ் அறிவித்தல் திகதியிலிருந்து இங்கு கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமையும் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஜனக பண்டார தென்னகோன் (பா. உ.),
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2020, சனவரி 04.

**அட்டவணை**

**(1) பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகள் மற்றும் பணிகள் | திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| 1. அரச சேவையிலிருந்து இளைப்பாறியவர்களின் நலன்புரி மற்றும் பாதுகாப்புக்காக ஓய்வூதியக் கோவையை வினைத்திறன்மிக்க முறையில் நடைமுறைப்படுத்துதல் | 1. ஓய்வூதியத் திணைக்களம் | • தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியச் சட்டம் (1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) |
| 2. அரசாங்கத்தின் சகல ஓய்வூதியத் திட்டங்கள் தொடர்பான அலுவல்களும் | 2. பதிவாளர் நாயகத் திணைக்களம் | • விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியக் கட்டளைச் சட்டம் (1898 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) |
| 3. பிறப்பு, விவாக மற்றும் மரணப் பதிவுடன் தொடர்புடைய அலுவல்கள் | 3. அரச கரும மொழிகள் திணைக்களம் | • தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்ட முறைமைகள் (ஆயுதப் படைகள்) சட்டம் (1998 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க) |
| 4. தேசிய மொழிக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதலும் அதனுடன் தொடர்புடைய அலுவல்களும் | 4. அரச கரும மொழிகள் ஆணைக்குழு | • விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்ட முறைமைகள் (ஆயுதப் படைகள்) சட்டம் (1970 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) |
| | 5. தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம் | • அரச சேவை சேமலாப நிதியக் கட்டளைச் சட்டம் (1942 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) |
| | 6. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை | • அரச சேவை ஓய்வூதியக்காரர் நம்பிக்கை நிதியச் சட்டம் (1999 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) |
| | 7. அரச சேவை ஓய்வூதியக்காரர் நம்பிக்கை நிதியம் | • பிறப்புக்களை மற்றும் இறப்புக்களைப் பதிவுசெய்யும் கட்டளைச் சட்டம் (1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) |
| | | • மலைநாட்டு விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் (1952 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) |
| | | • முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் (1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) |
| | | • நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (1907 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**(1) பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகள் மற்றும் பணிகள்* | *திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| | | • ஆவண பதிவுக் கட்டளைச் சட்டம் (1927 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) |
| | | • பொது விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டம் (1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) |
| | | • அரச கரும மொழிச் சட்டம் (1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) |
| | | • அரச கரும மொழி ஆணைக்குழுச் சட்டம் (1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) |
| | | • அரச மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனச் சட்டம் (2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க) |
| | | • இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபைச் சட்டம் (1997 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) |

**(2) அரச முகாமைத்துவ மற்றும் கணக்கீட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகள் மற்றும் பணிகள்* | *திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. அரச சேவைப் பயிற்சி | 1. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | • இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக சட்டம் (1982 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) |
| 2. எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக அரச துறையில் வினைத்திறன் மிக்கதும் உயர் தரத்திலானதுமான முறைகளை உருவாக்கி ஊக்குவித்தல் | 2. டிஸ்டன்ஸ் லேர்னிங் சென்றர் லிமிட்டெட் | |
| | 3. மிலோதா நிறுவனம் (Academy of Financial Studies) | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(2) அரச முகாமைத்துவ மற்றும் கணக்கீட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்***

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகள் மற்றும் பணிகள்* | *திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| *3. பூகோள ரீதியான சவால்களை எதிர்கொள்ளத் தேவையான ஆற்றல்களைக் கொண்ட அரச சேவையொன்றை உருவாக்குவதற்காக நவீன தொழில் முறைகளைப் பயன்படுத்தி அரச சேவையின் பயிற்சி முறைகளை இற்றைப்படுத்தல்* | | |
| *4. புதிய சமூக பொருளாதார போக்குகளுக்கு ஏற்ப அரச சேவையைப் பலப்படுத்துவதற்குப் பொருத்தமான முறையில் பயிற்சி நெறிகளை நவீனமயப்படுத்துதல்* | | |
| *5. அரச நிறுவனங்களின் பயனுறுதித் தன்மையையும் செயலாற்றுகையையும் மேம்படுத்துவதற்காக நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தியும் உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்வதன் மூலமும் நிகழ்ச்சிகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல்* | | |

*01-592*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.